முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

Provincial Department of Education, Northern Province khfhzf; fy;tpj; jpizf;fsk;> tlkhfhzk;

மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்
Provincial Department of Education, Northern Province

மூன்றாம் தவணைப் பரீட்சை 2025

சைவநெறி	தரம் 9	இரண்டு மணித்தியாலங்கள்

அறிவுறுத்தல்:

1. **எல்லா** வினாக்களுக்கும் விடை தருக.
2. விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை எழுதுக.**
3. விடைத்தாளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.

பகுதி – I

❖ பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடுடிக.

01. படைத்தல் தொழிலை ஆற்றும் மூர்த்தம்

1. பிரமா 2. விஸ்ணு 3. மகேஸ்வரன் 4. முருகன்

02. “செங்கணானும் பிரமனும் தம்முள்ளே…..” எனும் பாடலைப் பாடியவர்

1. திருஞானசம்பந்தர் 2. சுந்தரமூர்த்திநாயனார்
3. திருநாவுக்கரசர் 4. மாணிக்கவாசகர்

03. “விழுப்பம்” என்பதன் பொருள்

1. அன்பு 2. மேன்மை 3. அஹிம்சை 4. கருணை

04. பஞ்சாட்சரப் பதிகம் அடங்கும் திருமுறை

1. மூன்றாம் திருமுறை 2. இரண்டாம் திருமுறை
3. எட்டாந் திருமுறை 4. முதலாம் திருமுறை

05. யோகங்களின் எண்ணிக்கையாவது

1. 60 2. 30 3. 15 4. 27

06. அருணாச்சலதேசிகருக்கு “தேசிகமணி” எனும் பட்டம் வழங்கிக் கௌரவித்த நிறுவனம்

1. இராமகிருஷ்ணமடம் 2. அகில இலங்கை சைவப் புலவர் சங்கம்
3. மட்டக்களப்பு தமிழ்க் கலை மன்றம் 4. திருவாவடுதுறை ஆதீனம்

07. “யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி..” என்ற பாடல் இடம் பெறும் நூல்

Past Papers Wiki

 முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

1. பெரியபுராணம் 2. திருமந்திரம் 3. திருவாசகம் 4. திருவிசைப்பா

08. சிவபெருமான் மன்மதனை எரித்த தலமாவது

1. சிதம்பரம் 2. திருவண்ணாமலை 3. திருவாரூர் 4.திருக்குறுக்கை வீரட்டம்

09. நட்சத்திர விரதங்களுள் அடங்குவது

1. உத்தரம் 2. நவராத்திரி 3. வெள்ளிக்கிழமை 4. பிரதோஷம்

10. "மகர சங்கிராந்தி" என அழைக்கப்படும் பண்டிகையாக அமைவது

1. புதுவருடப்பிறப்பு 2. ஆடிப்பிறப்பு 3. தைப்பொங்கல் 4. தீபாவளி

11. "நாலுகவிப் பெருமாள்" என புகழ்ந்துரைக்கப்பட்டவர்

1. திருமங்கையாழ்வார் 2. நம்மாழ்வார் 3. திருமழிசையாழ்வார் 4. குலசேகராழ்வார்

12. திருப்பாண்டிக்கொடுமுடியில் வீற்றிருக்கும் இறைவி பெயர்

1. மாதுமையம்பாள் 2. கௌரியம்பாள் 3. நகுலாம்பிகை 4. பண்மொழியம்மை

13. "பொக்கிஷ மலை" எனும் தலம் அமைந்துள்ள இடம்

1. கொக்கட்டிச்சோலை 2. தாந்தாமலை 3. கீரிமலை 4. மாத்தளை

14. திருத்தொண்டர் திருவந்தாதியைப் பாடியவர்

1. சம்பந்தர் 2. சேக்கிழார் 3. சுந்தரர் 4. நம்பியாண்டார்நம்பி

15. சோழர்களால் "இராஜராஜபுரம்" என அழைக்கப்பட்ட இடம்

1. திருக்கோணேஸ்வரம் 2. பொலனறுவை 3. மாதோட்டம் 4. கந்தளாய்

16. "கணதெவிகோயில" என சிங்கள மக்களால் சிறப்பிக்கப்படும் ஆலயம்

1. கட்டுக்கலை செல்வ விநாயகர் ஆலயம் 2. ஈழத்துச் சிதம்பரம்

3. கதிர்காமம் 4. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம்

17. சைவ சமயத்தின் சிறப்பு நூலாக அமைவது

1.வேதம் 2. ஆகமம் 3. திருமந்திரம் 4. பெரியபுராணம்

18. தோத்திர நூலாகவும் சாஸ்திர நூலாகவும் விளங்கும் நூல்

1. திருமந்திரம் 2. திருவாசகம் 3. திருப்புகழ் 4. பெரியபுராணம்

19. தாருகாவனத்து முனிவர்களின் ஆணவத்தை அடக்க உதித்தவர்.

1. திருமால் 2. சிவன் 3. முருகன் 4. ஐயனார்

20. அட்டாங்க யோகங்களில் "மனதை கடவுள்பாற் செலுத்துதல்" என்பது

1. சமாதி 2. தாரணை 3. தியானம் 4. இயமம்

(20×2=40 புள்ளிகள்)

Past Papers Wiki

 முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

பகுதி – II

முதலாம், இரண்டாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

01)1. பெரியபுராணத்தின் முதல் நூல், வழிநூல் என்பவற்றைக் குறிப்பிடுக.

2. இருக்கு வேத மக்களால் வழிபடப்பட்ட தேவர்கள் இருவரின் பெயர்களைக் குறிப்பிடுக.

3. யோக நெறியில் நின்று முத்தி பெற்ற நாயன்மார்கள் இருவரைக் குறிப்பிடுக.

4. இந்துக்களால் கொண்டாடப்படும் பண்டிகைகள் இரண்டு தருக.

5. பொன்னம்பலவாணேஸ்வர இறைவன், இறைவி பெயர் யாது?

6. மாதோட்டத்தில் சோழர்களால் நிறுவப்பட்ட சிவாலயங்கள் இரண்டு தருக.

7. நாயன்மார்களால் தேவாரப் பாடல் பெற்ற தலங்கள் எவை?

8. மூவகைக் கன்மங்கள் எவை?

9. நாட்டுப்புற தெய்வங்களைக் குறிக்கும் வேறு பெயர்கள் இரண்டு தருக.

10. திருவாய்மொழிப் பாடல்களைப் பாடியவர்? (10×2=20 புள்ளிகள்)

02) பின்வரும் திருமுறைப் பாடல்களுள் இரண்டினை வரிக்கிரமமாக பிழையின்றி எழுதுக.
அவற்றைப் பாடியோர் பெயர், தலம், என்பவற்றைத் தருக

1. "ஏழிசையாய் இசைப்பயனாய்...." 2. "காப்பதோர் வில்லும்..."
3. "சொல்லாண்ட சுருதிப் ...." 4. "போற்றியோ நமசிவாய..."
5. "நையாத மனத்தினனை..."

(1+1+6)×2=16 புள்ளிகள்)

03) " ஆன்மீக வாழ்விற்கு விரதம் மிகச் சிறந்த சாதனமாகும்"

1. வருட விரதம் ஒன்றினைக் குறிப்பிடுக.
2. விரதம் என்பதற்கு நாவலர் தரும் விளக்கம் யாது?
3. கேதாரகௌரி விரதம் அனுஷ்டிக்கும் கால எல்லை யாது?
4. விரதங்களை அனுஷ்டிப்பதால் கிடைக்கும் நன்மைகள் மூன்றினைக் குறிப்பிடுக.

(1+2+2+3=08 புள்ளிகள்)

04) "சைவத்தின் முடிந்த முடிபு சைவசித்தாந்தம்"

1. சைவ சமயத்தின் பொது நூல் எனப்படுவது?
2. சைவசித்தாந்தம் கூறும் முப்பொருட்களும் எவை?
3. ஆணவமலம் "மூலமலம்" என அழைக்கப்படக் காரணம் யாது?
4. ஆன்மாவின் நல்ல செயல்களைக் கெடுக்கும் தீவினைக் குணங்கள் மூன்று தருக.

(1+2+2+3=08 புள்ளிகள்)

 முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

05) இலங்கையைச் "சிவபூமி" என அழைத்தவர் திருமூலர்

1. சோழ மன்னர்களது ஆட்சிக் காலத்தில் பொலனறுவை எப்பெயரால் அழைக்கப்பட்டது?
2. புராதன இலங்கையிற் 'பருமக' என அழைக்கப்பட்டவர்கள் யாவர்?
3. இராஜேந்திரச் சோழனால் தனது தாயாரின் நினைவாக பொலனறுவையில் அமைக்கப்பட்ட ஆலயம் எது?
4. புராதன காலத்திலேயே ஈழத்தில் சைவசமயம் நிலைபெற்றிருந்தது என்பதை எடுத்துக் காட்டும் சான்றுகள் எவை?

(1+2+2+3=08 புள்ளிகள்)

06) "யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி...."

1. நாட்டார் வழிபாடு எனப்படுவது யாது?
2. நாட்டார் ஆண் தெய்வங்கள் இருவரைக் குறிப்பிடுக.
3. ஐயனாருக்குரிய வேறு பெயர்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
4. ஐயனாரது அவதாரம் பற்றிப் புராணங்கள் எவ்வாறு கூறுகின்றன.

(1+2+2+3=08 புள்ளிகள்

07) எவையேனும் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக

01. ஆடிப்பிறப்பு 02. பஞ்சாங்கம்
03. திருப்புகழ் 04. மங்கையர்க்கரசியார் (4×2=08 புள்ளிகள்)

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library